# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.58/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | சண்முகத்தாய் |
| Husband's Name | : | சுடலைமாடன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.03.2026.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கைரேகை வைத்துள்ளேன்.

1. 25.07.1989 தேதியில் சுடலைமாடன் அவர்களுக்கு தனிவட்டாட்சியர் தென்காசி வழங்கிய பட்டா அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 06.02.1992 தேதியில் 1ம் வாதிக்கு அவரது கணவர் சுடலைமாடன் பிறப்பித்துக்கொடுத்த ஏற்பாட்டு ஆவணம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 01.05.2021 தேதியில் 1ம் வாதி, பிரதிவாதி மீது இலத்தூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுக்கான ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 22.11.1926 தேதியில் சுடலைமாடன் ததந்தை ஊர்க்காவலன் அவர்களுக்கு தபசில்சொத்தில் உரிமை காட்டும் 1926ம் ஆண்டு பத்திர எண்.4119 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது

5. வில்லங்க சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்குவிசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்)**

1. வாதிகள் எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. எங்கள் இடத்தில் பிரதிவாதிகள் கிழமேலாக 2 முழம் ஆக்கிரமிப்பு செய்து, சுவரும், படிக்கட்டும் கட்டியுள்ளார்கள். மேற்படி விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் அது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

3. மேற்படி ஆக்கிரமிப்பு சம்பந்தமாக பிரதிவாதிகள் மீது இலத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் மனு ரசீதுதான் வா.சா.ஆ.3 என்றால் சரிதான். மேற்படி ரசீதுடன் புகார் மனு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. காவல்நிலையத்தில் இருதரப்பினரையும் நிலஅளவையர் வைத்து அளந்து பார்க்க கூறினார்கள் என்றால் சரிதான். நாங்கள் தயாராக தான் இருந்தோம். பிரதிவாதிகள் தயாராக இல்லை.

5. மேற்படி புகாருக்கு பின்பு நிலஅளவையர் அளந்து பார்த்ததில் மேற்படி கட்டுமானம் அவர்கள் இடத்தில் இருந்தது என்றால் சரியல்ல, அவர்கள் அளந்து பார்க்கவில்லை.

6. பத்திரப்படி எனக்கு பாத்தியப்பட்ட சொத்து 3 ¾ செண்ட் உள்ளது. அதைபோல் தான் பட்டாவிலும் உள்ளது.

7. நீதிமன்றம் மூலம் ஆணையர் ஸ்தல பார்வை செய்தார் என்றால் சரிதான். ஆணையர் எங்கள் இடத்தையும், பிரதிவாதிகள் இடத்தையும் அளந்து காண்பித்தார் என்றால் சரிதான். அதன்படிதான் அறிக்கையும் தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

8. ஆணையரால் தாக்கல் செய்த அறிக்கையில் தென்வடல் 1 அடி 1 இஞ்ச் இடம் பிரதிவாதியின் இடம் எங்கள் கைவசம் இருந்துவருகிறது என்றால் சரியல்ல.

9. நான் சொல்வதுபோல் சுவரும், படிக்கட்டும் எனது இடத்தில் இருப்பதாக ஆணையர் அறிக்கையில் துலங்காது என்றால் சரியல்ல.

10. எங்கள் வீட்டிற்கு வடக்குபக்கமாக தான் பிரதிவாதிகள் வீடு உள்ளது என்றால் சரிதான்.

11. 1ம் பிரதிவாதிக்கு கணவர் இல்லை என்றால் சரிதான், எனக்கும் கணவர் இல்லை. நான் பிரதிவாதியின் தென்பக்க தாவா சுவரை பூசவிடாமல் கஷ்டப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல.

12. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை தனி தபசிலாக காட்டாததால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13. ஆணையர் அறிக்கையால் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படம் தான் தாவா சொத்து என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14. தாவா சுவரானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

15. எனவே நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் செலுத்திய நீதிமன்ற முத்திரைக்கட்டணமும் தவறு என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai